ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவல்லவாழ்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவல்லவாழ்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

## பெரிய திருமொழி – தந்தைதாய்

‡ தந்தை தாய் மக்களே ⋆
சுற்றம் என்றுற்றவர் பற்றி நின்ற ⋆
பந்தம் ஆர் வாழ்க்கையை ⋆
நொந்து நீ பழி எனக் கருதினாயேல் ⋆
அந்தம் ஆய் ஆதி ஆய் ⋆
ஆதிக்கும் ஆதி ஆய் ஆயன் ஆய ⋆
மைந்தனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.1** ॥

மின்னு மா வல்லியும் வஞ்சியும் வென்ற ⋆
நுண் இடை நுடங்கும் ⋆
அன்ன மென் நடையினார் கலவியை ⋆
அருவருத்தஞ்சினாயேல் ⋆
துன்னு மா மணி முடிப் பஞ்சவர்க்காகி ⋆
முன் தூது சென்ற ⋆
மன்னனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.2** ॥

பூண் உலாம் மென் முலைப் பாவைமார் ⋆
பொய்யினை மெய் இதென்று ⋆
பேணுவார் பேசும் அப்பேச்சை ⋆
நீ பிழை எனக் கருதினாயேல் ⋆
நீணிலா வெண் குடை வாணனார் ⋆
வேள்வியில் மண் இரந்த ⋆
மாணியார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.3** ॥

பண் உலாம் மென் மொழிப் பாவைமார் ⋆
பணைமுலை அணைதும் நாம் என்று ⋆
எண்ணுவார் எண்ணம் அதொழித்து ⋆
நீ பிழைத்துய்யக் கருதினாயேல் ⋆
விண் உளார் விண்ணின் மீதியன்ற ⋆
வேங்கடத்துளார் ⋆
வளங்கொள் முந்நீர் வண்ணனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.4** ॥

மஞ்சு தோய் வெண் குடை மன்னராய் ⋆
வாரணம் சூழ வாழ்ந்தார் ⋆
துஞ்சினார் என்பதோர் சொல்லை ⋆
நீ துயர் எனக் கருதினாயேல் ⋆
நஞ்சு தோய் கொங்கை மேல் அங்கைவாய் வைத்து ⋆
அவள் நாளை உண்ட ⋆
மைந்தனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.5** ॥

உருவின் ஆர் பிறவி சேர் ⋆
ஊன் பொதி நரம்பு தோல் குரம்பையுள் புக்கு ⋆
அருவி நோய் செய்து நின்றைவர் தாம் ⋆
வாழ்வதற்கஞ்சினாயேல் ⋆
திருவின் ஆர் வேதம் நான்கைந்து தீ ⋆
வேள்வியோடங்கம் ஆறும் ⋆
மருவினார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! **॥ 9.7.6 ॥**

நோய் எலாம் பெய்ததோர் ஆக்கையை ⋆
மெய் எனக் கொண்டு ⋆
வாளா பேயர் தாம் பேசும் அப்பேச்சை ⋆
நீ பிழை எனக் கருதினாயேல் ⋆
தீ உலா வெங்கதிர்த் திங்களாய் ⋆
மங்குல் வான் ஆகி நின்ற ⋆
மாயனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! **॥ 9.7.7 ॥**

மஞ்சு சேர் வான் எரி ⋆
நீர் நிலம் கால் இவை மயங்கி நின்ற ⋆
அஞ்சு சேர் ஆக்கையை ⋆
அரணம் அன்றென்றுய்யக் கருதினாயேல் ⋆
சந்து சேர் மென்முலைப் ⋆
பொன்மலர்ப் பாவையும் தாமும் ⋆
நாளும் வந்து சேர் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! **॥ 9.7.8 ॥**

வெள்ளியார் பிண்டியார் ⋆
போதியார் என்றிவர் ஓதுகின்ற ⋆
கள்ள நூல் தன்னையும் ⋆
கருமம் அன்றென்றுய்யக் கருதினாயேல் ⋆
தெள்ளியார் கை தொழும் தேவனார் ⋆
மாமுநீர் அமுது தந்த ⋆
வள்ளலார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.9** ॥

‡ மறைவலார் குறைவிலார் உறையும் ஊர் ⋆
வல்லவாழ் அடிகள் தம்மைச் ⋆
சிறை குலா வண்டறை சோலை சூழ் ⋆
கோல நீள் ஆலி நாடன் ⋆
கறை உலா வேல் வல்ல ⋆
கலியன் வாய் ஒலி இவை கற்று வல்லார் ⋆
இறைவர் ஆய் இரு நிலம் காவல் பூண்டு ⋆
இன்பம் நன்கெய்துவாரே ॥ **9.7.10** ॥

## திருவாய்மொழி – மானேய் நோக்கு

‡ மானேய் நோக்கு நல்லீர் ! ⋆
வைகலும் வினையேன் மெலிய ⋆
வானார் வண் கமுகும் ⋆
மது மல்லிகை கமழும் ⋆
தேனார் சோலைகள் சூழ் ⋆
திருவல்லவாழ் உறையும் கோனாரை ⋆
அடியேன் அடி கூடுவதென்று கொலோ ॥ **5.9.1** ॥

என்று கொல் தோழிமீர்காள் ⋆
எம்மை நீர் நலிந்தென் செய்தீரோ ⋆
பொன் திகழ் புன்னை மகிழ் ⋆
புது மாதவி மீதணவி ⋆
தென்றல் மணம் கமழும் ⋆
திருவல்லவாழ் நகருள் நின்ற பிரான் ⋆
அடி நீறு அடியோம் கொண்டு சூடுவதே ॥ **5.9.2** ॥

சூடும் மலர்க் குழலீர் ! ⋆
துயராட்டியேனை மெலிய ⋆
பாடு நல் வேத ஒலி ⋆
பரவைத் திரை போல் முழங்க ⋆
மாடுயர்ந்தோமப் புகை கமழும் ⋆
தண் திருவல்லவாழ் ⋆
நீடுறைகின்ற பிரான் ⋆
கழல் காண்டுங்கொல் நிச்சலுமே ॥ **5.9.3** ॥

நிச்சலும் தோழிமீர்காள் ! ⋆
எம்மை நீர் நலிந்தென் செய்தீரோ ⋆
பச்சிலை நீள் கமுகும் ⋆
பலவும் தெங்கும் வாழைகளும் ⋆
மச்சணி மாடங்கள் மீதணவும் ⋆
தண் திருவல்லவாழ் ⋆
நச்சரவின் அணைமேல் ⋆
நம் பிரானது நன்னலமே ॥ **5.9.4** ॥

நன்னலத் தோழிமீர்காள் ! ⋆
நல்ல அந்தணர் வேள்விப் புகை ⋆

மை நலங்கொண்டுயர் விண் மறைக்கும் ⋆
தண் திருவல்லவாழ் ⋆
கன்னலங்கட்டி தன்னைக் ⋆
கனியை இன்னமுதம் தன்னை ⋆
என்னலங்கொள் சுடரை ⋆
என்று கொல் கண்கள் காண்பதுவே ॥ **5.9.5** ॥

காண்பதெஞ்ஞான்று கொலோ ⋆
வினையேன் கனிவாய் மடவீர் ⋆
பாண் குரல் வண்டினொடு ⋆
பசுந் தென்றலும் ஆகி எங்கும் ⋆
சேண் சினை ஓங்கு மரச் ⋆
செழுங்கானல் திருவல்லவாழ் ⋆
மாண் குறள் கோலப் பிரான் ⋆
மலர்த் தாமரைப் பாதங்களே ॥ **5.9.6** ॥

பாதங்கள் மேல் அணி ⋆
பூந்தொழக் கூடுங்கொல் பாவை நல்லீர் ⋆
ஓத நெடுந்தடத்துள் ⋆
உயர் தாமரை செங்கழுநீர் ⋆
மாதர்கள் வாண்முகமும் ⋆
கண்ணும் ஏந்தும் திருவல்லவாழ் ⋆
நாதன் இஞ்ஞாலம் உண்ட ⋆
நம் பிரான் தன்னை நாள்தொறுமே ॥ **5.9.7** ॥

நாள்தொறும் வீடின்றியே ⋆
தொழக் கூடுங்கொல் நன்னுதலீர் ⋆
ஆடுறு தீங்கரும்பும் ⋆

விளை செந்நெலும் ஆகி எங்கும் ⋆
மாடுறு பூந்தடம் சேர் ⋆
வயல் சூழ் தண் திருவல்லவாழ் ⋆
நீடுறைகின்ற பிரான் ⋆
நிலம் தாவிய நீள் கழலே ॥ **5.9.8** ॥

கழல் வளை பூரிப்ப யாம் கண்டு ⋆
கை தொழக் கூடுங்கொலோ ⋆
குழல் என்ன யாழும் என்னக் ⋆
குளிர் சோலையுள் தேன் அருந்தி ⋆
மழலை வரி வண்டுகள் இசை பாடும் ⋆
திருவல்லவாழ் ⋆
சுழலின் மலி சக்கரப் பெருமான் ⋆
அது தொல் அருளே ॥ **5.9.9** ॥

தொல் அருள் நல் வினையால் ⋆
சொலக் கூடுங்கொல் தோழிமீர்காள் ⋆
தொல் அருள் மண்ணும் விண்ணும் ⋆
தொழ நின்ற திருநகரம் ⋆
நல் அருள் ஆயிரவர் ⋆
நலன் ஏந்தும் திருவல்லவாழ் ⋆
நல் அருள் நம் பெருமான் ⋆
நாராயணன் நாமங்களே ॥ **5.9.10** ॥

‡ நாமங்கள் ஆயிரம் உடைய ⋆
நம் பெருமான் அடி மேல் ⋆
சேமம் கொள் தென் குருகூர்ச் ⋆
சடகோபன் தெரிந்துரைத்த ⋆

நாமங்கள் ஆயிரத்துள் ⋆
இவை பத்தும் திருவல்லவாழ் ⋆
சேமம் கொள் தென் நகர்மேல் ⋆
செப்புவார் சிறந்தார் பிறந்தே ॥ **5.9.11** ॥

### திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

வல்லவாழ்ப்
பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியை ⋆
தொன்னீர்க் கடல் கிடந்த தோளா மணிச் சுடரை ⋆
என் மனத்து மாலை இடவெந்தை ஈசனை ⋆
மன்னும் கடல் மல்லை மாயவனை ॥ **64** ॥

திரு செல்வத்திருக்கொழுந்து நாச்சியார் சமேத கோலப்பிரான்
திருவடிகளே சரணம்